MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
Adding years of healthy life

NUH
National University Hospital
A member of the NUHS

Alexandra Health

EASTERN HEALTH ALLIANCE

JurongHealth

SingHealth

SINGHEALTH / PIL / T125R0

நோயாளி தகவல் கையேடு

எலும்புத் தசை தளர்த்திகள்

(SKELETAL MUSCLE RELAXANTS)

பாக்லோ.ஃபென் (Baclofen)
எபெரிசோன் (Eperisone)

உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

பாக்லோ.ஃபென் (Baclofen) மற்றும் எபெரிசோன் (Eperisone) ஆகியவை, எலும்புகளை ஒட்டியுள்ள தசைகளைத் தளர்த்தக்கூடிய மருந்துகளாகும். முதுகுத் தண்டு காயம் அடைவதால் ஏற்படும் தசை விறைப்பு மற்றும் தசை இறுக்கத்தைப் போக்க இவை பயன்படுத்தப்படுகின்றன. மேலும், தசை வலியைக் குறைத்து ஒருவரின் நடமாட்டத்தை மேம்படுத்தவும் இவை உதவுகின்றன.

இந்த மருந்தை நான் **எப்படி** பயன்படுத்த வேண்டும்?

பிரச்சினையின் கடுமைக்கேற்ப, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். இந்த மருந்தை மருத்துவர் கூறும் அளவில் பயன்படுத்துங்கள்.

இந்த மருந்துகளைப் பொதுவாக ஒரு நாளைக்கு மூன்று முறை, உணவுக்குப் பிறகு எடுக்க வேண்டும். பாக்லோ.ஃபென் மருந்து பலன் தருவதற்கு மூன்று அல்லது நான்கு நாட்கள் ஆகலாம்.

மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை எடுக்காமல் விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

இந்த மருந்து மந்தநிலையை ஏற்படுத்தலாம் மற்றும் ஒருவரின் விழிப்புணர்ச்சியையும் திறனாய்வையும் குறைத்துவிடலாம். எனவே, இந்த மருந்தை உட்கொள்ளும் நோயாளிகள் வாகனம் ஓட்டக் கூடாது அல்லது இயந்திரங்களை இயக்கக் கூடாது. துக்கமின்மை, பேச்சு குளறுதல், தசைப் பலவீனம் போன்ற மற்ற பக்க-விளைவுகளும் ஏற்படலாம்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

வேறு மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் உட்கொண்டு வந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால், அதைக் கண்டிப்பாக மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும்: முகம்/கண்கள்/ உதடுகள் வீங்கும், மூச்சுவிட சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள். மருத்துவரைக் கேட்காமல் மருந்தை நீங்களாகவே திடீரென்று நிறுத்தாதீர்கள்.

மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.